4. பள்ளிக் கல்வியில் தேசிய அளவில் முன்னிலை வகிப்பதற்கான திட்டங்கள், திருக்கோயில்கள் மேலும் சிறப்புறவும், பக்தர்களுக்குக் கூடுதல் வசதிகள் கிடைப்பதற்குமான திட்டங்கள், கிராமப்புறப் பொருளாதாரத்தை மேம்படுத்திட கால்நடை வளர்ப்பு, பால் உற்பத்தி, மீன் வளர்ப்பு போன்றவற்றின் வளர்ச்சிக்கான திட்டங்கள்—முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள், சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கற்கை நன்றே, கற்கை நன்றே, பிச்சை புகினும் கற்கை நன்றே" என்றார் ஔவை பிராட்டி. பிச்சை எடுத்தாவது கல்வியைப் பெற்றுவிடுங்கள் என்று ஔவை வலியுறுத்தியது மன்னர் ஆட்சிக் காலம். இது மக்களாட்சிக் காலம். அதுவும் மக்களாட்சியின் மணிமகுடமாக இருந்து கொண்டிருக்கின்ற தமிழகத்தினுடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் காலம். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி ஒரு நிலை தமிழகத்திலே வந்துவிடக் கூடாது, தமிழகத்திலே பள்ளிக் கல்வியானாலும், தொடக்கக் கல்வியானாலும், உயர் கல்வியானாலும் எத்தகைய உலகளாவிய கல்வியானாலும், அவற்றை தமிழன் பெறுவதற்கு, அவன் ஆய்வு செய்வதற்கு, அறிவதற்கு நான் துணை நிற்பேன்; நான் அதற்கு எல்லா வகைகளிலும் (மேசையைத் தட்டும் ஒலி) உகந்த நடவடிக்கைகளை, திட்டங்களை வகுத்துக்கொண்டே இருப்பேன்; (மேசையைத் தட்டும் ஒலி) அவன் கல்வி பெற வேண்டும் என்ற வகையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு ஏராளமான நலத் திட்டங்களை இந்த மாமன்றத்திலே அறிவித்திருக்கிறார்கள். வறுமையிலே இருந்து கொண்டிருக்கிற ஒருவன், வழியிலே புதையல் கிடைத்து விட்டாலே, ஐயோ இந்தப் புதையலை பெற்றுவிட்டோமே என்று தடுமாறிப் போவான். அவன் பொன்னும், மணியும் மழையாய்ப் பொழிந்தால் எப்படி திக்குமுக்காடிப் போவானோ (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, கல்வித் துறை, வேளாண்மைத் துறை, பால் வளத் துறை, மீன் வளத் துறை, அறநிலையத் துறை, என எல்லா*

2015 செப்டம்பர் 23] [முனைவர் செ.கு. தமிழரசன்]

துறைகளிலும் அடுக்கடுக்காய், அடுக்கடுக்காய், அடுக்கடுக்காய் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிற திட்டங்களிலே எதைப் பாராட்டுவது, எதைத் தவிர்ப்பது? (மேசையைத் தட்டும் ஒலி) பொன்னும், மணியும் மழையாய்ப் பொழிந்தால் எப்படி ஒரு தடுமாற்றம் வருமோ, அந்தத் தடுமாற்றத்தோடு இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பாராட்டிக் கொண்டிருக்கிறோம். வளர்ந்த ஒவ்வொரு நாட்டிற்கும், வளர்ச்சியிலே அக்கறை உள்ள ஒவ்வொரு நாட்டிற்கும், அதுவும் வெகுமக்கள்தொகைக்காக திட்டங்களை இயற்றிக் கொண்டிருக்கிற ஒவ்வொரு அரசுக்கும் கல்வி மிக, மிக அவசியமானது என்பதை வலியுறுத்துவதற்காகத்தான் அரசியல் சட்டத்திலே, 14-வது வயது வரையிலே கட்டாயக் கல்வியை நம்முடைய சட்டம் நடைமுறைப்படுத்தியது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதை மேம்படுத்துகிறவகையிலே இன்றைக்கு பள்ளிக் கல்வித் துறைக்கும், கல்வித் துறைக்கு துணை நிற்கிற ஆசிரியர்களுக்கும் வாரி வழங்கியிருக்கிறார்கள். ஒரு சமூகம் அறிவுத் துறையிலும், அறத் துறையிலும் சிறந்தோங்கினால்தான், அந்தச் சமூகம் தனி மனித ஒழுக்கத்திலும், சமூக ஒழுக்கத்திலும் செழுமையுடையதாய் இருக்கும் என்ற உணர்வோடு அறநிலையத் துறையையும், ஆன்மிகத் துறையையும் கையில் எடுத்து, மக்களுக்கு மட்டுமல்ல; நம்முடைய இலக்கியம் சொல்கிற மாக்களான மிருகங்கள், செடி, கொடிகள், மீன்கள், விலங்குகள் போன்றவற்றிற்கும் நலத் திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

நண்பகல் 12-00

ஒரு ஆற்றல் எப்போது பேராற்றல் ஆகிறது என்று சொன்னால், அது பெருமக்களுடைய ஆற்றலாக்கப்படுகின்றபோதுதான். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பேராற்றலின் பேரொளியாய் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு தமிழகமே ஆற்றல் மிகுந்த ஒரு சமூகமாய் மலர வேண்டும், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழன் இந்தத் தரணியிலே தலைநிமிர்ந்து நிற்க வேண்டும், தமிழர்களுக்கு ஒரு தனிச் சிறப்பு வேண்டும் என்பதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு வழங்கியிருக்கின்ற இந்தத் திட்டங்களை வாயார வாழ்த்தி, பாராட்டி, நன்றி கூறி, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.*

திரு. உ. தனியரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாய்த் தமிழ் மண்ணில் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக ஆன்மிகத் தலங்களுக்கு, கோயில்களுக்கு வழிபடச் செல்கின்ற பக்தர்கள் இறைவனை வேண்டி வரம் கேட்பார்கள். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக்காலத்தில்தான் ஆண்டவனிடம் என்ன வரம் வேண்டும் என்று கேட்கிறார்களோ, (மேசையைத் தட்டும் ஒலி) அத்தனை வரங்களையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நம்முடைய தாய்த் திருநாட்டில் தருகின்றார்கள். மானுடம் செழிக்க மனிதனுக்குத் தேவையான அனைத்தையும் தருகின்ற ஆற்றல்மிகு ஆட்சித் தலைவர் தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதற்கான சான்று, (மேசையைத் தட்டும் ஒலி) ஆயிரக்கணக்கான கோயில்களைப் புனரமைத்து, திருப்பணிகள் செய்து, திருப்பணிகள் செய்யப்பட்ட அந்தக் கோயில்களிலே அறுசுவை உணவோடு அன்னதானமும் தருவதுதான். முன்பெல்லாம் பக்தர்கள் தினம், தினம் ஆண்டவனை தரிசித்துவிட்டு அரோகரா, அரோகரா, கோவிந்தா, கோவிந்தா என்பார்கள். ஆனால், தற்போது பக்தர்கள் புரட்சித் தலைவி அம்மா, அம்மா, அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) என்று வயிறார உணவு அருந்திவிட்டு, நேர்த்தியோடு ஆண்டவனை முழுமையாக தரிசித்துவிட்டு, ஆலயங்களிலிருந்து பாதுகாப்போடு குடும்பம் குடும்பமாய் புன்னகையோடு வீடுகளுக்கு வந்து சேர்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

அடுத்து, கால்நடைகள். இந்தியாவிலேயே அதிகப்படியான கால்நடைகள் உள்ள தமிழகத்தில் பால் வளம் பெருகியிருக்கிறது, கால்நடைச் செல்வங்கள் பெருகியிருக்கின்றன. அந்தக் கால்நடைச் செல்வங்கள்கூட, காடு கழனிகளிலே, தோட்டங்களிலே உண்டு மகிழ்ந்து, அம்மா, அம்மா என்று மகிழ்ந்து அழைக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) மகிழ்ச்சிகரமான தருணத்தினை உருவாக்கித் தந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

அடுத்து, குழந்தை பிறந்தவுடனே, அந்தப் பச்சிளம் குழந்தைகளுக்கு பரிசுப் பெட்டகத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் தருகிறார்கள். அது எவ்வளவு மணமானது! அது

2015 செப்டம்பர் 23] [திரு. உ. தனியரசு]

எவ்வளவு மகிழ்வானது! எவ்வளவு சுகாதாரமானது! (மேசையைத் தட்டும் ஒலி) பிறக்கின்ற குழந்தை மணத்தோடு, சுகாதாரத்தோடு இந்தத் தமிழ் மண்ணில் விழுந்தவுடனே அது மகிழ்ந்து நுகரக்கூடிய ஓர் உயர்ந்த வகைப் பரிசுப் பெட்டகத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் கடைக்கோடியில் இருக்கின்ற ஏழையெளிய, ஒடுக்கப்பட்ட, அரசு மருத்துவமனைகளிலே பிறக்கின்ற பச்சிளம் குழந்தைகளுக்கு உயர்தர பரிசுப் பொருட்களைத் தருகிறார்கள். அந்தக் குழந்தை பால்வாடிக்குச் சென்றால், அங்கே அம்மா அவர்களுடைய சத்துணவு, கலவை சாதம், அருமையான சத்துள்ள முட்டை வழங்கப்படுகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 39 தொடக்கப் பள்ளிகள் அமைக்கப்படும் என்று இன்று அறிவித்திருக்கிறார்கள். 39 அரசு தொடக்கப் பள்ளிகளை புதியதாக உருவாக்கி, தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தி, நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தி, உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தி அந்த மாணவச் செல்வங்கள் தாம் வாழ்கின்ற வசிப்பிடங்களிலேயே உயர்ந்த, தரமான அறிவுசார்ந்த கல்வியைப் பெற வேண்டும் என்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் கடந்த 4 ஆண்டுகளில் தமிழக கல்வித் துறையில் (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை கண்டிராத மறுமலர்ச்சியை, புரட்சியை செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், இந்தியாவிற்கே முன்மாதிரியாக மாணவர்களுக்கு மடிக் கணினியைத் தந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான்கு ஆண்டுகளில் 700 புதிய மருத்துவப் படிப்புகளை, புதிய பட்டயப் படிப்பிற்கான இடங்களைத் தந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். புதிய சட்டக் கல்லூரிகளைத் தந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

திரு. உ. தனியரசு: பொறியியல் கல்லூரி உள்ளிட்ட கல்வி மட்டுமல்லாமல், உலகத்தில் என்னென்ன கற்க வேண்டுமென்று மாணவர்கள் விரும்புகிறார்களோ, அவ்வளவிற்கும் பாடத்

திட்டங்களைத் தந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதனால், இன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த அனைத்துத் திட்டங்களையும் மனதாரப் பாராட்டி, வரவேற்று, நன்றி கூறி, நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.*

பிற்பகல் 12–05

***திரு. பி.வி. கதிரவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறையில் ஒரு மாநிலம் சிறந்து விளங்க வேண்டுமென்றால், கல்விரீதியாக உயர்த்தினால்தான் அந்த மாநிலம் ஒரு சிறந்த மாநிலமாக வரும் என்பதனால்தான் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 'தொலைநோக்குத் திட்டம் 2023'-ஐ கொண்டு வந்தார்கள். மத்திய அரசு பணம் கொடுக்காவிட்டாலும்கூட தமிழக அரசு பணம் ஒதுக்கி, பள்ளிக் கல்வித் துறையை மேம்படுத்தும்வகையில் 9 சிறந்த அறிவிப்புகளை மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றையதினம் விதி 110-ன்கீழ் அறிவித்திருக்கிறார்கள். உண்மையிலேயே அவையெல்லாம் பாராட்டப்படக்கூடியவை. அதேபோன்று, இந்து சமய அறநிலையத் துறையிலே, மாண்புமிகு அம்மா அவர்கள் 7 அறிவிப்புகளை அறிவித்திருக்கிறார்கள். அதாவது, ஓர் ஆட்சி சிறந்த ஆட்சியாக வேண்டுமென்றால், தெய்வத்துடன்கூடிய ஆட்சியாக இருக்க வேண்டுமென்ற நல்ல சிந்தனையோடு மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்து சமய அறநிலையத் துறைக்கு 7 அறிவிப்புகளை அறிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, இந்த ஆண்டுகூட ஆதி திராவிட மக்களுக்காக 1,004 திருக்கோயில்களில் கும்பாபிஷேகம் நடத்தப்படும் என்ற அறிவிப்பை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.*

அதேபோன்று, கால்நடை பராமரிப்புத் துறையிலே, கிராமப்புறங்களிலே சாதாரண மக்கள் பொருளாதாரரீதியாக வளர வேண்டுமென்பதற்காக இரண்டாம் வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். அந்த அடிப்படையிலே, கிராமப்புறங்களில் கால்நடைகளை வளர்ப்பதற்கும், கால்நடைகளுக்குத் தேவையான

மருத்துவத்தினை செய்வதற்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் 15 அறிவிப்புகளை அறிவித்திருக்கிறார்கள். அவற்றை எங்களுடைய அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பாக மனதார வரவேற்று, பாராட்டி, அமர்கின்றேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காயத்ரிக்கு ஈடான மந்திரம் இல்லை. காசிக்கு நிகரான ஷேத்திரம் இல்லை. கங்கைக்கு சமமான தீர்த்தம் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஏகாதசிக்கு இணையான விரதம் இல்லை. எங்கள் அம்மா அவர்களுக்கு நிகரான தலைவர் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அம்மா அவர்களுக்கு நிகரான தலைவர் இல்லை; இல்லவே இல்லை, இல்லவே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) விதி 110–ன்கீழ், தமிழக மக்களின் வாழ்வாதாரத்தை ஒவ்வொரு நாளும் உயர்த்திக் கொண்டிருக்கும் உலகம் போற்றும் உத்தமத் தலைவர், மாண்புமிகு எங்கள் அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 4 ஆண்டுகளில் 100 ஆண்டுகளாய் ஓடாமல் இருந்த தேர்களையும் சேர்த்து, 138 திருத்தேர்களுக்கு தேரோட்டம் கண்ட தலைவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக வரலாற்றில் இதுவரை இல்லாத அளவில் 7,327 திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் செய்து குடமுழுக்கு கண்ட தலைவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 724 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டத்தை வழங்கி, பக்தர்களின் பசியைப் போக்கிய அன்னலட்சுமி எங்கள் தாய் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வரிசையில் இன்று, இந்து சமய அறநிலையத் துறையில் ஏற்றம் தரும் 7 அறிவிப்புகளைத் தந்த தமிழகத்துத் திருக்கோயில்களைக் காக்கும் எங்கள் அறக்கோயில் மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து வணங்கி, என் சார்பிலும், துறையின் சார்பிலும் கோடானுகோடி நன்றியை பாதங்களிலே சமர்ப்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதர்களுக்கு இணையாக கால்நடைகளுக்கும் மருத்துவம் பார்க்க வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு திட்டங்களைத் தரும் இந்தியாவின் ஒரே முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் விலையில்லா ஆடுகள் தந்தார்கள். கறவைப் பசுக்கள் தந்தார்கள். அதற்குக் குறைந்த விலையிலே தீவனம் தந்தார்கள். நோய்வரக் கூடாதென்று தடுப்பூசித் திட்டம் தந்தார்கள். மருந்துகளுக்கான நிதியை உயர்த்தித் தந்தார்கள். கிராமங்கள்தோறும் மருத்துவ முகாம் தந்தார்கள். மருத்துவம் பார்க்க 841 மருத்துவர்கள் தந்தார்கள். ஆய்வாளர்கள் தந்தார்கள். வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு 1,143 மருந்தகக் கட்டடங்கள் தந்தார்கள். 200 புதிய கிளை நிலையங்களைத் தந்தார்கள். அதிக டாக்டர்கள் தேவை என்று 2 கால்நடை மருத்துவக் கல்லூரிகள் தந்தார்கள்.

எல்லாம் தந்த மாண்புமிகு அம்மா அவர்கள், இன்றைக்கு மனிதர்களுக்கு மட்டுமே ஆம்புலன்ஸ் என்ற நிலையை மாற்றி இந்தியாவிலேயே முதன்முறையாக கால்நடைகளுக்கும் ஆம்புலன்ஸ் வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், ரூபாய் 120.40 கோடிக்கு திட்டங்களையும் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களே, உங்களைப்போல கால்நடைகள்மீது கருணைகொண்ட முதல்வர் இத்தரணியிலே எங்குமே கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கள் கால்நடைகளெல்லாம் கவலைப்படுகின்றன, அம்மா அவர்களை வாழ்த்த வாய் இல்லையே என்று. எனவே, எங்கள் வாயில்லா ஜீவன்கள் சார்பாகவும், கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பாகவும் கோடானுகோடி நன்றிகளை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2015 செப்டம்பர் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 12–10

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சதி வலைகளை அறுத்தெறிந்து, சதி புனைந்த சோதனைகளையெல்லாம் சாதனைகளாக்குவதில் எங்கள் சாதனைத் தாய்க்கு நிகர் எவருமே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) நலிந்தோருக்கு நாளெல்லாம் உழைத்து, வறியவருக்கு வசந்தத்தைத் தந்து, வான்மழைபோல் பல நலத் திட்டங்களை தினம், தினம் தந்திடும் தாயே! கருணை மழையால் தமிழகத்தைப் பசுமை கொஞ்சும் இரட்டை இலைமயமாக்கிய தமிழ்நாட்டு மக்களின் அற்புதத் தாயே! உலக முதலீட்டாளர்களை உவகையோடு உபசரித்து, தமிழ் மண்ணை தரணியில் தலைநிமிரச் செய்த எங்கள் அன்னையே! (மேசையைத் தட்டும் ஒலி) கடல் உணவுப் பொருட்களைப் பதப்படுத்தும் வகையில், ஐந்து இடங்களில் மீன் இறங்குதளங்கள் அமைக்கவும், உள்நாட்டு மீன் வளத்தைப் பெருக்க உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி, மீன் குஞ்சு உற்பத்தி மற்றும் மீன் பண்ணைகளை மேம்படுத்த, 13 இடங்களில் நிதி ஒதுக்கியும், அலங்கார மீன் வளர்ப்பவர்கள், தொழில்முனைவோர்கள் மற்றும் ஏற்றுமதியில் ஈடுபடுவோர்கள் பலன் அடையும் வகையில், மாதவரத்தில் அலங்கார மீன் வளர்ப்புத் தொழில்முனைப்புத் திறன் மேம்படுத்துதல் மற்றும் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க மீன் வளத் துறைக்கு மட்டும் ரூ.65 கோடியே 65 இலட்சம் செலவில் விதி 110 ன்கீழ் அறிவித்த திட்டங்களுக்காகவும் மீனவர்களின் காவல் தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது சார்பிலும், மீன் வளத் துறையின் சார்பிலும், தமிழக மீனவர்களின் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியை பாதம் பணிந்து வணங்கி சமர்ப்பித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் வளத் துறையில் உட்கட்டமைப்பு மற்றும் கட்டுமான மேம்பாட்டிற்காக கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.409*

கோடிக்குமேல் வாரி வழங்கிய வாழும் வள்ளல், மாண்புமிகு அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) பால் வளத் துறையின் ஒட்டுமொத்த ஆண்டு விற்பனையை ரூ.2,369 கோடியிலிருந்து ரூ.3,881 கோடியாக உயர வழிவகை செய்தும், (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது 4 இலட்சத்து 60 ஆயிரம் பால் வழங்கும் உற்பத்தியாளர்கள் மற்றும் 17 இலட்சம் நுகர்வோர்களின் நலன்களைக் கருத்திற்கொண்டும், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் மேம்பாட்டுத் திட்டங்களுக்காக ரூ.120 கோடியே 50 இலட்சம் வாரி வழங்கிய, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவி Phenomenal Legendary மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் கோடானுகோடி நெஞ்சார்ந்த நன்றிகளை பால் வளத் துறையின் சார்பாகவும், என் சார்பாகவும் காணிக்கையாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரினில் சிறந்த நாடு பாரத நாடு என்பதைப்போல, கல்வியில் சிறந்த நாடு எங்கள் தாய் ஆளுகின்ற தமிழகம் என்ற பெருமையையும், (மேசையைத் தட்டும் ஒலி) நன்மையையும் பெற்றிருக்கின்ற ஒன்றரை கோடி மாணாக்கர்களின் விடிவெள்ளியாக விளங்குகின்ற எங்கள் அம்மா அவர்கள், இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், பள்ளிக் கல்வித் துறைக்கு ரூ.85 ஆயிரம் கோடியை அள்ளித் தந்த வள்ளல். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரே உத்தரவில் 21 ஆயிரம் ஆசிரியர்களையும், ஒட்டுமொத்தமாக 72 ஆயிரத்து 843 ஆசிரியர்களையும் நியமனம் செய்து, கல்வியில் ஆசிய கண்டத்திற்கே அச்சாரம் போட்டவர் எங்கள் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்று விதி 110—ன்கீழ் பள்ளிக் கல்வித் துறைக்கு அறிவித்திருக்கின்ற திட்டங்கள் 2023—ல் உலக அளவில், கல்வியில் தமிழகம் முதலிடம் என்கிற பெருமையைப் பெறும் எனச் சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களை வாழ்த்த வயதில்லை, பாதம் பணிந்து வணங்கி, என்னுடைய நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பின்னர்தான் கல்விக்காக அதிக நிதியொதுக்கம் செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு கல்வித் துறைக்கு, சுமார் 25 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கி, கல்விப் புரட்சிக்கு வித்திட்டவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

படிக்கப் புத்தகம், சுமக்கப் பை, எழுத பேனா, பென்சில், தூரம் கடக்க மிதிவண்டி, பாதம் சுமக்க காலணி, உள்ளங்கைக்குள் உலகை அடக்க மடிக் கணினி என எண்ணற்ற உதவிகள் செய்து, கல்விக்குக் கண் திறக்கும் கனிவுளத்துத் தாய் இன்றைக்கு பள்ளிக் கல்வித் துறைக்கு சிறப்பான அறிவிப்புகளைத் தந்து, கலைமகளின் உருவமாக, இலையிலே வீற்றிருக்கும் இன்னொரு சரஸ்வதியாகத் திகழ்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சாது என்ற நிலையை மாற்றி, கறவை மாடும், ஆடும் கொடுத்து கவலையைத் துரத்தியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளின் கண்கண்ட கடவுளாக, காவல் தெய்வமாக விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்கள், கால்நடைகளின் துயருக்கு விடைபோட்டு, எளிய நெஞ்சங்களுக்கு வேண்டியதை எடைபோட்டு, குடை தரும் நிழலாய் இன்றைக்கு கால்நடைத் துறைக்குக் கனிவான அறிவிப்புகளைத் தந்திருக்கிறார்கள்.

பிற்பகல் 12—15

மிக அபூர்வமான ஸ்தல விருட்சங்கள் மீட்கப்படுவது குறித்த அறிவிப்புகள்மூலம், ஆன்மிக அன்பர்கள் நெஞ்சில் நீங்கா இடம் பிடித்துள்ளார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள்.

தர்மத்தைக் காக்க கண்ணன் அவதரிப்பார் என்கிறது பகவத் கீதை. தமிழகம் தழைக்க அவதரித்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பது அனைவரின் நம்பிக்கை. 63 நாயன்மார்கள், 12 ஆழ்வார்கள்போல, நவயுக தெய்வத் தூதராக, கலியுக காவியமாகத் திகழ்ந்து, மக்களுக்கும், இறைவனுக்கும் அரும்பணியாற்றி வரும் மாண்புமிகு அம்மா அவர்கள், இன்று, இந்து சமய அறநிலையத் துறை குறித்த அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்கள்.

[பேரவைத் தலைவர்] [2015 செப்டம்பர் 23

பள்ளிக் கல்வித் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை, மீன் வளம் மற்றும் பால் வளம் குறித்த சிறப்பான அறிவிப்புகளை வெளியிட்டுள்ள மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) திரு. துரைமுருகன், உட்காருங்கள், அரசினர் தனித் தீர்மானம் முடியட்டும். (குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *அரசினர் தனித் தீர்மானத்தை முன்மொழிந்து விடுகிறேன். (குறுக்கீடு) அடுத்து, உங்களுக்குத் தீர்மானத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறதல்லவா? (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. துரைமுருகன், இது முக்கியமான தீர்மானம் அல்லவா? (குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *உங்களுக்கு தீர்மானத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது அல்லவா? (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. துரைமுருகன், உட்காருங்கள். வேண்டுமென்றால், நீங்கள் பேசும்போது பேசலாம். (குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *நீங்கள் கொண்டு வந்ததைப் பேசுவதற்கு வாய்ப்பிருக்கிறது. (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. துரைமுருகன், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள், தீர்மானத்தை முன்மொழியட்டும். நீங்கள் பேசும்போது பேசலாம். (குறுக்கீடு) அனுமதியில்லை, தீர்மானத்தை முன்மொழியட்டும், பிறகு நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)*